## தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) சென்ற ஆண்டு தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் மீதான என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழ் காணும் பரிந்துரையினை அமுல் செய்யப்பட்டிருக்கவில்லை.

| பந்தி அவதானத்திற்கு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.2.1(அ) | ஆணைக்குழுவிற்கு சொந்தமான சகல சொத்துக்களையும் நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டினும் ஆணைக்குழுவினால் 2004 சனவரி 01 ஆந் திகதிக்குப் பிறகு கையேற்றுக் கொள்ளப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் உள்ளாக்கப்பட்டிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டிற்கு முன்பு இருந்த சொத்துக்கள் உள்ளாக்கப்பட்டிருக்க வில்லை. | வேற்றுமைகளை இனங்கண்டு சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | அவதானிப்புக்கள் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய இலக்கம் 05/2016 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | 3.2 பந்தி | ஒவ்வொரு நிதி ஆண்டிலும் யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் சென்ற ஆண்டின் பொருட் கணிப:பு அறிக்கையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடமும் பிரதியொன்று சகிதம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமும் சமர்ப்பிக்க வேண்டியிருந்தும், ஆணைக்குழு 2020 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் ஒரு பகுதியினை சுமார் 06 மாத காலம் தாமதிக்கப்பட்டு 2021 திசெம்பர் மாதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ் அறிக்கையில் அம்பாறை, பதுள்ள, கல்முன, கண்டி ஆகிய பிராந்திய அலுவலகங்களின் மற்றும் நுவரெலியா, கிளிநொச்சி, மன்னார், பொலன்னறுவை ஆகிய உப அலுவலகங்களின் பொருட் கணிப்பு அறிக்கைகள் உட்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொருட் கணிப்பினை முடிக்கப்பட்டு அவற்றின் அறிக்கைகளை இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதோடு பிரதான அலுவலகத்தின் பொருட் கணிப்பினை முடிக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3.2.5 பந்தி | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஆண்டிலும் ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொது 47 அறிக்கையின் படி, தள்ளுபடி செய்யப்பட வேண்டிய, புதுப்பிக்கப்பட வேண்டிய, விற்பனை செய்யப்பட வேண்டிய மற்றும் வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கக் கூடிய பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்படாது சென்ற ஆண்டின் பொருட் கணிப்பு அறிக்கையினை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2020 வருடம் பிரதான அலுவலகத்தின் பொது 47 இனை தள்ளுபடி செய்வதற்காக உத்தேச பொருட்கள் புத்தளம் கமநல சேவைகள் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1993 செப்டம்பர் 21 ஆந் திகதிய 22/93 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | கடமையில் ஈடுபட்டிருக்கும் போது 2014 வருடம் விபத்திற்குள்ளான ஆணைக்குழுவின் பெண் அதிகாரி ஒருவருக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட ரூபா 308,700 நட்டஈட்டுத் தொகையினைக்கு மேலதிகமாக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீதாக மாத்திரம் 2016 ஏப்ரல் மாதம் முதல் கொண்டு 2019 மார்ச் மாதம் வரையிலும் மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவாக மொத்தம் ரூபா 650,016 வழங்கப்பட்டிருந்தது. | 2016 முதல் கடமைக்கு வரவேண்டி இருந்தமையால் அவரை அலுவலகத்திற்கு வரவழைப்பது அத்தியாவசிய தேவைப்பாடாக இருந்தமையினாலும் அவரின் பாதிப்பு நிலைமையினை இடைநடுவே அறுவை சிகிட்சைக்கும் உட்படுத்த நேரிட்டமையினாலும் ஆணைக்குழுவின் படி போக்குவரத்து கொடுப்பனவினை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தொகை ரூபா 650,016 ஆக இருந்த போதும் மாதாந்தம் வழங்கப்பட்ட தொகை ரூபா 2,313 ஆகும். | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் 2016 வருடம் முதல் 2018 வருடம் வரையிலான கால எல்லையினுள் கல்வி அமைச்சுக்கு, ஓய்வூதிய திணைக்களத்திற்கு மற்றும் இலங்கை பொலிசுக்கு அவை தொடர்பாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 147 பரிந்துரைகளில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதியான 2022 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையில் பெற்றுக் கொடுக்கப்பட்ட பரிந்துரைகளில் நூற்றுக்கு 44, அதாவது 64 பரிந்துரைகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. | ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படாது இருந்தமையிட்டு மீள் கவனம் செலுத்தும் பொருட்டு ஆணைக்குழுவினால் அதற்காக பரிசோதிப்பு மற்றும் விசாரணை பிரிவின் மூலமாக தனி அலகொன்றினை அமைத்து பரிந்துரைகள் செயற்படாமையினால் தொடர்பாக பின் விசாரிப்பினை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பெற்றுக் கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்துவது தொடர்பாக பின் விசாரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மாத்தறை பிரதேச அலுவலகம் மூலமாக 2020 மற்றும் 2021 வருடங்களின் போது பொலிஸ் நிலையங்கள், தடுத்து வைப்பு மத்திய நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் அவதானிக்கப்பட்டு விசாரணை அதிகாரியினால் அது தொடர்பாக தயாரிக்கப்படும் அறிக்கைகளில் பதியப்பட வேண்டிய மிக முக்கிய விடயங்களாக காட்டப்பட்டுள்ள தள அவதானிப்பின் போது கண்டு கொள்ளப்பட்ட விடயங்கள் அது தொடர்பாக தமது முடிவுகள் மற்றும் மேற்கொண்ட | ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படாது இருந்தமையிட்டு மீள் கவனம் செலுத்தும் பொருட்டு ஆணைக்குழுவினால் பரிசோதிப்பு மற்றும் விசாரணைப் பிரிவின மூலமாக தனி அலகொன்றினை அமைத்து பரிந்துரைகள் செயற்படாமையினை தொடர்பாக பின் விசாரிப்பினை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொலிஸ் நிலையங்கள், தடுத்து வைப்புக்கள், மற்றும் சிறைச்சாலைகள் அவதானிக்கப்பட்டு விசாரணை அதிகாரியினால் தயாரிக்கப்படும் அறிக்கையில் தள அவதானிப்பின் போது வெளியான விடயங்கள் அது தொடர்பாக தமது முடிவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை யாவை என்பன உட்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கையினை யாவை என்பன உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும், அவ்வறிக்கையினை யார் கவனத்திற்கு கொண்டு செல்வது என்பதனை குறிக்கப்பட்டில்லாது இருந்ததுடன் அவ்வறிக்கையினை பிறிதொரு அதிகாரியினால் பின் விசாரிப்பு மேற்கொள்ளப்படுவதற்கான சான்றுகள் இருக்கவில்லை. | | |
| (இ) | கல்வி மற்றும் அறிவுறுத்தும் வேலைத் திட்டங்க்ள அமுல் செய்யப்பட்டாலும் அதன் ஊடாக மக்களின் புரிந்துணர்வினை மேம்படாது இருந்தமையினால் மாத்தறை பிரதேச செயலகத்திற்கு சென்ற 05 வருடத்தினுள் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் பரிந்துரைகள் மற்றும் சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்படாமல் நூற்றுக்கு 67 முதற்கொண்டு 95 இடைப்பட்ட முறைப்பாடுகள் அளவினை பற்பல காரணங்களினால் நீக்கப்பட்டு இருந்ததுடன் நூற்றுக்கு 40 க்கு மேலான முறைப்பாடுகள் அளவினை மனித உரிமை மீறல் ஏற்படாமை அல்லது விடயப்பரப்பினைக்கு இணங்காமை காரணமாய் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தன. | மாத்தறை பிரதேச அலுவலகம் மூலம் தென் மாகாணத்தின் காலி, மாத்தறை, மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்கள் உள்ளடங்குகின்றன. மாத்தறை பிரதேச அலுவலகத்தினால் சென்ற 05 வருடங்களினுள் சுமார் 108 கல்விக்கான வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அதன் மூலமாக பிரதேச மக்களுக்கு மனித உரிமை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாத்தறை பிரதேச அலுவலகத்தை சார்ந்த பாரிய பிரதேசம் உட்படுவதுடன் அப்பிரதேசத்தினுள் ஏராளமான மக்கள் வாழ்கின்றனர். | மக்களினது புரிந்துணர்வினை மேம்படுத்தும் விதத்திலான அறிவுறுத்தலுக்கான வேலைத்திட்டங்க்ள செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | மாத்தறை பிரதேச அலுவலகம் மூலமாக முறைப்பாடுகளினை விசாரணை மேற்கொள்ளும் செயற்பாடுகளில் 02 வருடம் முதல் 08 வருடங்கள் இடையிலான காலதாமதம் ஏற்பட்டிருந்ததுடன் | பிரதேச அலுவலகங்களில் முறைப்பாடு விசாரணைக்கும் மற்றும் பரிந்துரகள் பெற்றுக் கொடுக்கவும் துரித நடவடிக்கை மேற்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முறைப்பாடு விசாரணை செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

வருடத்தினுள் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அவ்வருடத்தினுள்ளேயே பரிந்துரைகள் பெற்றுக் கொடுக்கப்பட்ட அளவு நூற்றுக்கு 01 ஐ விடக் குறைவானதாக இருந்தது.

**3.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் நடந்த மகளிர் தின நினைவு நிகழ்ச்சித்திட்டத்தின் போது புகைப்படம் மற்றும் ஒளிநாடாப் பதிவுகள் அரச பெறுகை வழிகாட்டல்களின் படி இல்லாது, எவ்வித விலைமனு கோரலும் மேற்கொள்ளப்படாமல் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு அதற்கான ரூபா 30,000 வழங்கப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூறுவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கிற்கான நிகழ்ச்சித் திட்டத்தினை புகைப்படம் மற்றும் ஒளிநாடாப் பதிவினை மேற்கொள்வதற்கு இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுடன் நித்தம் தொடர்பு கொள்ளும் நிறுவனத்துடன் வாய்மூல வினை மனு விசாரிப்பு நடாத்தி அவ்விலை மனுக்காக முறையான அனுமதியுடன் அரசுக்கு எவ்வித இழப்பும் நேராதவாறு மற்றும் ஆகக்கூடிய சேவையினை பெற்றுக் கொள்வதற்கு இவ்வாறான குறைபாடுகள் நீக்கப்பட்டு பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய கடமையினை மேற்கொள்ளும் படி சகல உத்தியோகத்தர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | பெறுகை வழிகாட்டலினை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நடந்த மகளிர் தின நினைவு விழாவினை நடாத்துவதற்காக பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தினை தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதன் போது உணவு மற்றும் பான வகையினை கொள்வனவு செய்தல் தொடர்பாக விலைமனு கோரப்படாததுடன் மண்டப வசதிகளுக்காக மாத்திரம் விலைமனு கோரப்பட்டிருந்தது. | 2021 வருட மகளிர் தின நினைவினை நடாத்துவதற்காக 04 நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தினை தெரிவு செய்யப்பட்டதுடன் அந் நிறுவனத்தின் மூலம் உணவும் விநியோகிக்கப்பட்டது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம், வேறெந்த நிறுவனத்திடமிருந்தோ அல்லது வெளி நபரிடமிருந்தோ உணவு பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. ஆகையால் உணவு பெற்றுக் கொள்ளும் விலைமனு கோரலினை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் இல்லாமையினால் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்தே உணவு பெற்றுக் கொள்ளப்பட்டது. | விலைமனு கோரலின் போது பொது மண்டப வசதியினை அல்லாமல் உணவு விநியோகமும் உட்பட விலைமனு கோரப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வு ஆண்டில் ரூபா 600,000 பெறுமதியான லெப்டொப் கணினியினை கொள்வனவு செய்யும் பெறுகையின் போது அதற்கான தொழில்நுட்ப விபர அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6.1(அ)(ii) பந்தியினை பின்பற்றப்படாமல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தலைவரின் கையொப்பத்தில் மாத்திரம் அனுமியினை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் விபரங்கள் மற்றும் விலை மனுக்களினை பெற்றுக் கொடுக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அனுமதியினைக்கு முன்வைக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் கொவிட் 19 தொற்று பாரதூரமான முறையில் நிலவின காலமாகையினால் தலைவர் குழு அங்கத்தவர்களுடன் தொலைபேசி மூலம் கலந்துரையாடிக்கொண்டு வாய்மொழி மூல உடன்பாட்டுடன் தலைவரால் தயார் செய்யப்பட்ட கொடுக்கப்பட்ட உடன்பாட்டின் மீதான முடிவினை பெற்று | பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அம்முடிவினை தலைவர் மட்டும் கைச்சாத்திட்டு முன்வைப்பதனை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இது போன்று குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு கடமைகளை நிறைவேற்றும் போது தேவையான சரியான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் சகல உத்தியோகத்தர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | |
| (ஈ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 பந்தியின் பிரகாரம் விலை மனுக்களை திறந்து பகிரங்கப்படுத்தும் செயற்பாடுகள் அதற்குரிய படிவப் பத்திரத்தில் பதியப்பட வேண்டியதுடன் அப்பதிவுக் குறிப்புக்களின் விலைமனுக்கள் திறந்து பகிரங்கப்படுத்தும் குழுவின் சகல அங்கத்தவர்களும் கைச்சாத்திடப்பட வேண்டும். அவ்வாறான போதிலும் லப்டொப் கணினி பொறியினை கொள்வனவு பெறுகையின் போது அவ்வாறான விலைமனு திறப்பதற்கான பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 பந்தியின் பிரகாரம் விலைமனுக்களை திறக்கும் பொருட்டு சகல அங்கத்தவர்களும் கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் கொவிட் 19 சந்தர்ப்பத்தின் போது இவ்வாறு செய்வதற்கு இயலாது போய் இருந்ததுடன் தற்போது விலைமனுக்கள் திறப்பது தொடர்பான குறைபாடுகளை இற்றைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய செயற்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சென்ற வருடம் முதல் பாவனை மேற்கொள்ளப்படாது தளத்தினுள் தரித்து விடப்பட்டிருந்த 03 மோட்டார் சைக்கிள்கள் திருத்தப்படுவதற்கோ அல்லது தள்ளுபடி செய்வதற்கோ அல்லது வேறொரு | 03 மோட்டார் சைக்கிள்களையும் கடமைத் தேவைப்பாடுகளுக்காக ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்திடம் கையளிப்பதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கோ ஆணைக்குழு செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் பெண் அதிகாரி ஒருவரின் கையினால் சேதத்திற்குள்ளான மடிக் கணனிப் பொறியினை மீள் திருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 80,000 தொகையினை அவ் அதிகாரியிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சேதப்பட்ட மடிக் கணனியினை திருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 80,000 தொகையினை, கணனி பொறியினை பாவனை செய்த உத்தியோகத்தரிடம் அதனை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் இது தொடர்பாக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் அம் மேன்முறையீட்டு சபையின் முடிவினை கிடைத்தலும் அறவிடுவதற்காக அவசியமான நடவடிக்கை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | ரூபா 80,000 அறவிடுவதற்கு செயற்பட வேண்டும். |
| (இ) | ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களினால் மாதாந்த வேலைத்திட்டங்க்ள தயாரிக்கப்பட்டு அவற்றை பிரதான காரியாலயத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் மாத இறுதியின் போது திட்டமிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவது தொடர்பாக முன்னேற்ற அறிக்கையினை பிரதான காரியாலயத்திடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆயினும், மாத்தறை பிராந்திய அலுவலகம் 2020 மற்றும் 2021 வருடங்களில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | முன்னேற்ற அறிக்கைகள் முறையான சமர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதனை தொடர்பாக பின் விசாரிப்பினை மேற்கொள்வது பிரதான காரியாலயத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும், அப்பின் விசாரிப்பினை அவ்வாறு மேற்கொள்ளப்படாததன் குறைபாட்டினை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் இக்குறைபாடுகளினை நிவர்த்தி செய்து கொண்டு செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யப்பட்டு செயற்படுவதற்கு இணங்குகின்றேன். | பிராந்திய அலுவலகங் களினால் மாதாந்த வேலைத்திட்டங்கள் மற்றும் மாத இறுதியின் போது அதற்கான முன்னேற்ற அறிக்கை பிரதான காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாட்சி

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 40 பிரிவின் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டு முதற்கொண்டு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவிற்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்காக விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. ஆணைக்குழுவில் இக் கடமைகளுக்காக தகுதியான அதிகாரியொருவர் இல்லாது இருந்தமையினால் ஆட்சேர்ப்பினை தாமதப்பட்டது. தற்போது ஆட்சேர்ப்பினை இடைநிறுத்தப்பட்டுள்ள மையினால் இதற்கான அதிகாரி ஒருவரை நியமிப்பது பிரச்சினைக்குரியதாக உள்ளது. | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 40 ஆவது பிரிவின் படி உள்ளக கண்ககாய்வு செயற்பாடுகள் செயற்படுத்தப்பட வேண்டிமை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 41 பிரிவின் படி ஒவ்வொரு அம்சத்திற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று இருக்க வேண்டி உள்ள போதிலும் 2017 வருடம் முதற்கொண்டு ஆணைக்குழுவினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை நடாத்திச் செல்லப்பட்டிருகக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இல்லாது இருந்தமையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை நடாத்தப்படவில்லை. | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 41 ஆவது பிரிவின் படி செயற்பட வேண்டிமை. |

**5.** **மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னைய தாள் செயலாளர் 2018 சனவரி 30 ஆந் திகதி கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நடாத்தப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணையின் அறிக்கையினை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு 2019 நவம்பர் 21 ஆந் திகதி செயலாளரின் பணி நீக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழுவினால் 2020 வருடம் அது தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரை சுமார் இரண்டு வருடங்கள் கழிந்து போய் இருந்தும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டினுள் கொவிட் 19 தொற்று காரணமாக, சாட்சியங்களை சாட்சிக்கு வரவழைப்பதில் ஏற்பட்ட இடர்பாடுகளினால் ஒழுக்காற்று பரீட்சிப்பினை நீண்ட நாட்கள் பிற்போடப்பட்டமையினால் காலம் நீண்டுவிட்டது. இப்பரீட்சிப்பினை முடிவுக்கு கொண்டு வந்து அறிக்கையினை பெற்றுத்தரும்படி அறியக் கொடுத்திருப்பதுடன் 03 மாதங்களுக்குள் முடிக்கப்படுவதாக தற்போது ஊர்சிதமளிக்கப்பட்டுள்ளது. | முறையான ஒழுக்காற்று நடவடிக்கையினை துரித கதியில் முடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாமினை 235 ஆக இருந்ததுடன் உண்மையான பணிக்குழாமினை 144 ஆகும். 93 அதிகாரிகளுக்காக வெற்றிடங்கள் நிலவியதுடன் அவற்றில் சிரேஷ்ட மட்டத்திலான 21 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்திலான 37 வெற்றிடங்களும் மற்றும் இரண்டாம் மட்டத்திலான 35 வெற்றிடங்களும் நிலவின. ஆரம்ப மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமினை விஞ்சி இரு உத்தியோகத்தர்கள் | வெற்றிடங்களாக உள்ள இப் பதவிகளில் 63 பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரசின் கொள்கை ரீதியான காரணங்களினால் ஆட்சேர்ப்பினை இடைநிறுத்தப்பட்டுள்ளது. | அத்தியவசிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

மேலதிகமாக இருந்தனர். அதன்படி ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாமில் நூற்றுக்கு 40 வெற்றிடங்களாக இருந்தன.

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆணைக்குழுவில் சிரேஷ்ட மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாம் 46 ஆக இருந்ததுடன் உண்மையான பணிக்குழாம் 25 ஆகும். ஒரு உத்தியோகத்தர் இரண்டாம் நிலை அடிப்படையிலும் இன்னும் இரு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் நிரப்பப்பட்டிருந்தனர். அதன்படி ஆணைக்குழுவில் சிரேஷ்ட மட்டத்திலான 24 பதவிகள் நிரப்பப்படாது இருந்தன. | வெற்றிடங்களாக உள்ள இப்பதவிகளில் 63 பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அரசின் கொள்கை ரீதியான காரணங்களினால் ஆட்சேர்ப்பினை இடைநிறுத்தப்பட்டுள்ளது. | அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |